**2023 –ம் வருடம் மார்ச் மாதம் 29 – ம் நாள் புதன்கிழமை காலை 11.00 மணிக்கு நகராட்சி மன்ற கூட்ட அரங்கில் நடந்தேரிய சாதாரணக் கூட்டத்தின் கூட்ட நடவடிக்கைகள்.**

**தலைமை :– திருமதி. எல். ஷீலா கேத்திரின்,**

**நகரமன்ற தலைவர்.**

**470. ந.க.எண். /2023/ டி1**

பார்வையில் கண்டுள்ள நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் கடிதத்தில் தெரிவித்துள்ளபடி இந்நகராட்சிக்காக V.P.BB**58389**க்கு கட்டணம் 01.10.2022 முதல் 31.12.2022 வரை மொத்தம் ரூ.63,216/– ECS மூலம் செலுத்த மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| | | |
|---|---|---|
| Account Name | : | Accounts Officer ( cash) BSNL. TN circle |
| Account Number | : | 4386002100014658 |
| Branch Details | : | Punjab National Bank,<br>Royopettach High Road Chennai – 600006. |
| IFSC Caod | : | PUNB0438600 |

மேலும், மேற்படி தொகையினை உடனடியாக செலுத்த வேண்டி இருந்ததால் அவசர அவசியத்தை கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று தொகை செலுத்தியதற்கும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அ.கு: மன்றம் அனுமதிக்கலாம்.

தீர்மானம் – அனுமதிக்கப்பட்டது.

**471.ந.க.எண்.449 /2023/ எப்2**

நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், திருப்பூர் அவர்களது கடித எண்.**3984/2013**/பி1, நாள்.**01.02.2023** தேதிய கடிதத்திற்கிணங்க, தேசிய வாழ்வாதார இயக்க திட்டத்தின் கீழ் (NULM) PM Svanidhi Se Samridhi பாரத பிரதமரின் ஸ்வநிதி திட்டத்தின் கீழ் சம்ரிதி போஜன திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இத்திட்டமானது **2020–2021–**ம் ஆண்டில் தெருவோர வியாபாரிகளை கணக்கெடுத்த வங்கிகளில் முதல் தவணையாக ரூ.**10000/–** பெற்ற தெருவோர வியாபாரிகள் மற்றும் அவரது குடும்பத்தினர் பயன் அடையும் வகையில் கீழ்கண்ட திட்டங்களின் இனங்கள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. அதன் விவரம் மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | திட்டத்தின் பெயர் | |
|---|---|---|
| 1. | One nation one ration card | ஒரு நாடு ஒரு ரேஷன் அட்டை திட்டம் |
| 2. | PM Suraksha Bima Yojana | பிரதம மந்திரி சுரக்ஷா பீமா யோஜனா |
| 3. | PM Jeevam Jyot Bima Yojana | பிரதம மந்திரி ஜீவன் ஜோதி பீமா யோஜனா |
| 4. | PM Shram Yogi Mandhan Yojana | பிரதம மந்திரி ஷ்ரம் யோகி மான்தன் யோஜனா |

| | | |
|---|---|---|
| 5. | PM Jan Dhan Yojana | பிரதம மந்திரி ஜன் தன் யோஜனா |
| 6. | Registration under BoCW | கட்டிட மற்றும் கட்டுமான தொழிலாளர் துறையின் கீழ் பதிவு |
| 7. | Janani Suraksha Yojana | ஜனனி சுரக்ஷா யோஜனா |
| 8. | PM Matru Vandana Yojana | பிரதம மந்திரி மாத்ரு வந்தனா யோஜனா |

அ.கு: **1.** மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

**2.** இத்திட்டத்தினை செயல்படுத்திட கணக்கெடுப்பு பணியை மேற்கொள்ள விலைப்புள்ளி பெற்று பணி உத்திரவு வழங்கவும், அதற்காகும் செலவுத்தொகைக்கு மன்றம் அனுமதிக்கலாம்.

தீர்மானம் – அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

**472.** ந.க.எண்.**449 /2023/** எப்**2**

நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் திருப்பூர் அவர்களின் கடித எண்.**3984/2013/**பி**1**, நாள்.**01.02.2023** தேதிய கடிதத்திற்கிணங்க மத்திய அரசின் தேசிய வாழ்வாதார இயக்க திட்டத்தின் கீழ் (NULM) PM Svanidhi Se-Samnidhi என்ற புதிய திட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இந்த திட்டத்தின் மூலம் **8** இனங்கள் (component)செயல்படுத்துவதால் தெருவோர வியாபாரிகள் மற்றும் அவரது குடும்பத்தினர் பயன் பெறும் வகையில் இத்திட்டம் செயல்பட உள்ளது.

மேலும் இத்திட்டத்தினை செயல்படுத்தி கணக்கெடுப்பு செய்ய கீழ் கண்ட நிருவனங்களிடமிருந்து விலைப் புள்ளி வரப்பட்டுள்ளது.

| வ. எண் | நிறுவனத்தின் பெயர் மற்றும் முகவரி | பொருள் | தொகை |
|---|---|---|---|
| 1 | Parthi infotech.No.5/5,2nd Vedathalangadu, karuvampalaam, Tiruppur. | Professional charges of the socio Economic profiling to the street vendors of loan disbursed vendors with family members under PM Svanidhi scheme | Rs.107+19.26% GST = 126.26 |
| 2 | DB iffo solutions. C-5 Flat No.95, Todhunter nager, saidapet, chennai | The online socio Economic profiling for street vendors with Family members process of PMS SE SAMRIDH in coonoor municipality | Rs.110+19.80% GST = 129.80 |
| 3 | PALMER, 4/259, Sathya colony, kandamaur, andipatty gandamanur, Theni. | Online data entry- profiling under PM Svanidhi (Se-Saminidhi) | Rs.109.50+19.71% GST = 129.21 |

மேற்கண்ட நிறுவனங்களிடமிருந்து விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன. இவைகளில் குறைவாக விலைப்புள்ளி கொடுத்த திருவாளர்.PARTHI INFORTECH, TIRUPUR அவர்களுக்கு வழங்க மன்றத்தின் அனுமதிக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

அ.கு: மன்றம் அனுமதி அளிக்கலாம்.

தீர்மானம் – அனுமதி அளிக்கப்பட்டது.

**473. ந.க.எண்.இ4/0722/2023**

நமக்கு நாமே திட்டம் 2022 –2023 கீழ் குன்னூர் நகராட்சிக்கு நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், திருப்பூர் அவர்களின் செயல்முறை ந.க.எண்.4299/2022/பி1, நாள்.20.12.2023ன் படி 4 பணிகளை ரூ.37,11,000/– மதிப்பீட்டில் மேற்கொள்வதற்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இதில் அரசு மானியமாக ரூ.24.74 இலட்சம் மற்றும் பொது மக்கள் பங்களிப்பு ரூ.12.37 இலட்சம் என நிதி ஒதுக்கீடு செய்து உத்திரவு வழங்கப்பட்டுள்ளது என்பதை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டுத்தொகை ரூபாய் இலட்சத்தில் |
|---|---|---|
| | நமக்கு நாமே திட்டம் 2021 –2022 | |
| 1 | குன்னூர் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.7 புனித அந்தோணியார் ஆண்கள் மேல்நிலைப்பள்ளி அருகில் ஆரஞ்சுகுரோசூ சாலைப்பகுதியில் தடுப்புச்சுவர் அமைக்கும் பணி | 11.70 |
| 2 | குன்னூர் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.12 காலேஜ் சாலைகதவு எண்.137 முதல் 55A வரைகான்கிரீட் நடைபாதை அமைக்கும் பணி | 4.50 |
| 3 | குன்னூர் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.6 புனித மேரிஸ் பள்ளி படுகட்டு அருகில் தடுப்பச்சுவர் அமைக்கும் பணி | 16.08 |
| 4 | குன்னூர் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.28 சகாயமாதா மருத்துவமனை சாலை பகுதியில் தடுப்புசுவர் அமைக்கும் பணி | 4.83 |
| | மொத்தம் | 37.11 |

அலுவலக குறிப்பு:– மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

தீர்மானம் – பார்வையிட்டு பதிவு செய்யப்பட்டது.

**474. ந.க.எண்.எச்2/762/2023**

இந்நகராட்சிக்கு சொந்தமான பொது சுகாதாரப்பிரிவில் இயக்கும் கீழ்கண்ட விவரப்படி வாகனங்களுக்கு காப்பீட்டுக்காலம் (Insurance) 30.03.2023ன் முடிவடைவதால் வரும் நிதி ஆண்டிற்கு காப்பீட்டுத்தொகை செலுத்த வேண்டியுள்ளது.

| வ.எண் | வாகனஎண் | தொகை |
|---|---|---|
| 1 | TN43 B 3925 | 10,490/- |
| 2 | TN43 K 0297 | 18,888/- |
| 3 | TN43 K 0255 | 18,888/- |
| 4 | TN43 K 0249 | 18,888/- |
| 5 | TN43 H 8215 | 18,727/- |
| 6 | TN43 H 8255 | 18,727/- |
| 7 | TN43 H 8241 | 18,727/- |
| 8 | TN43 H 8228 | 18,727/- |
| 9 | TN43 H 8259 | 18,727/- |
| | மொத்தம் | 1,60,789/– |

எனவே மேற்கண்ட பொதுசுகாதார வாகனங்களைக்கு காப்பீட்டுத் தொகை செலுத்த ஆகும் செலவினம் ரூபாய் **1,60,789 (** ஒரு இலட்சத்தி அறுபதாயிரத்து எழுநூற்றி எண்பத்தி ஒன்பது மட்டும்) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. அவசர அவசியம் கருதி தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று தொகை வழங்கியதற்கும் மன்றம் அனுமதிக்கலாம்.

அ.கு: மன்றம் அனுமதிக்கலாம்.

தீர்மானம் – அனுமதிக்கப்பட்டது.

**475. ந.க.எண்.அ4/810/2023**

குன்னூர் நகராட்சிக்கு சொந்தமான உட்புற சந்தைப்பகுதியில், (i) மாட்டுக்கறிக் கடை அருகில், (ii) மூன்று இடங்களில் உள்ள படிக்கட்டுகளில் பொது மக்கள் ஏறி இறங்க ஏதுவாக திரு.லான்சிலாட் ஜோசப் மொர்னாஸ் (எ) லான்சி மொர்னாஸ் குன்னூர் என்பவர் தனது சொந்த செலவில் MS பைப் அமைக்க, அனுமதி வழங்க கோரியுள்ளார். எனவே அதற்கான அனுமதி வழங்க மன்றத்தில் அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு: மன்றம் அனுமதி வழங்கலாம்.

தீர்மானம் – அனுமதி வழங்கப்பட்டது.

**476. ந.க.எண்.இ4/4311/2022**

குன்னூர் நகராட்சியில் பொது நிதி –**2022** –**2023** ன் கீழ் குன்னூர் நகராட்சிக்கு சொந்தமான உரகிடங்கு பகுதியில் உள்ள உரகிடங்கு அலுவலகம் பழுது பார்க்கும் பணிக்கு ரூ.**1,00,000/–**க்கு நகர மன்ற தீர்மானம் எண்.**281** நாள்.**30.09.2022**ல் அனுமதி பெறப்பட்டுள்ளது. **23.11.2022**ல் அன்று முதலாம் அழைப்பில் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளைக்கொண்டு ஒப்பு நோக்குப்பட்டியல் தயார் செய்து மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகிறது.

| வ.எண் | ஒப்பந்ததாரரின் பெயர் | ஒப்பந்ததாரர்கோரிய தொகை | தொகை விகிதம் |
|---|---|---|---|
| 1 | திரு.வி.எஸ்.மாதேஸ்ராஜன் | ரூ.**82,704/–** | மதிப்பீட்டை விட **0.13%** குறைவு |
| 2 | திருவாளர் கனிஸ்கா கன்ஸ்ட்ரக்சன்ஸ் | ரூ.**82,975/–** | மதிப்பீட்டை விட **0.20%** அதிகம் |

அ.கு: மேற் படி பணிக்கு மதிப்பீட்டை விட 0.13% குறைவாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு.வி.எஸ்.மாதேஸ்ராஜன் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்க்கலாம்

தீர்மானம் – அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

**477.** ந.க.எண்.அ4/670/2016

குன்னூர் நகராட்சிக்கு சொந்தமான உட்புற சந்தைப்பகுதியில் கீழ்க்காணும் வரியில்லா இன எண்கள் கொண்ட கடை குத்தகைதாரர்களிடம் நிலுவைத்தொகை செலுத்தக்கோரி பலமுறை நேரில் அறிவுறுத்தியும், அறிவிப்புகள் வழங்கியும் நிலுவைத்தொகையினை செலுத்தப்படாத காரணத்தினால் பூட்டி சீல் வைக்கவும், நிலுவை தொகை வசூலிக்க மேல் நடவடிக்கை மேற்கொள்ளவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

| வ. எண் | வரியில்லா இன எண் | பெயர் | செலுத்தவேண்டிய நிலுவைத்தொகை |
|---|---|---|---|
| 1 | 065/1100 | திரு.எஸ்.ஜப்பார் | 1,80,597/– |
| 2 | 065/1102 | திரு.கே.சம்சுதீன் | 4,02,667/– |
| 3 | 065/1139 | திரு.அப்துல் சத்தார் | 4,45,421/– |
| 4 | 065/1135 | திரு.கே.பொன்னுசாமி | 4,39,481/– |
| 5 | 065/1136 | திரு.ரங்கராஜ் | 3,52,345/– |
| 6 | 065/1137 | திரு.ஜனார்தனன் | 4,95,790/– |
| 7 | 065/1138 | திரு.என்.பழனியப்ப முதலியார் | 4,71,051/– |
| 8 | 065/1142 | திரு.எ.ஷாஜகான் | 4,44,040/– |
| 9 | 065/1147 | திரு.எல்.ஸ்டீபன் | 3,90,856/– |
| 10 | 065/1126 | திரு.கே.ஜோகன் | 3,33,079/– |
| 11 | 065/1127 | திருமதி.பாக்கியலட்சுமி | 3,39,312/– |
| 12 | 065/1128 | திரு.எஸ்.பாலு | 3,37,257/– |
| 13 | 065/1131 | திரு.பி.கிருஷ்ணன் | 3,57,833/– |
| 14 | 065/1098 | திரு.ரஹமத்துல்லா | 1,78,170/– |
| 15 | 065/1129 | திரு.வி.எ.சுப்ரமணி | 3,70,082/– |
| 16 | 065/1124 | திரு.சுப்பையா | 4,56,750/– |
| 17 | 065/1133 | திரு.சாந்தி ராஜ்குமார் | 4,80,782/– |
| | | மொத்தம் | 64,75,513/– |

மேற்காணும் 17 கடை குத்தகைதாரர்கள் மீது நீதிமன்ற வழக்கு தொடர்ந்து தொகையினை வசூலிக்கவும், அக்கடைகளை பொது ஏலத்தில் விட நடவடிக்கை மேற்கொள்ளவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு: மன்றம் அனுமதி வழங்கலாம்.

தீர்மானம் – அனுமதி வழங்கப்பட்டது.

**478. ந.க.எண்.அ4/5026/2014**

குன்னூர் நகராட்சிக்கு சொந்தமான மூன்று வருட குத்தகை இனங்களில் கீழ்க்காணும் குத்தகை இனங்களுக்கு பழைய மென்பொருளில் இருந்து புதிய மென்பொருளில் பதிவிறக்கம் செய்யும் போது தவறுதலாக மூன்று பழைய வரியில்லா எண்கள் பதிவிறக்கம் செய்யப்பட்டுள்ளது. கீழ்காணும் வரியில்லா இன எண்கள் 2018–2019 ஆம் ஆண்டிற்கான நிலுவையில் காண்பிக்கிறது. 2019–2020ல் இருந்து நிலுவை நடப்பு பதிவேட்டில் நிலுவை வருவதில்லை.

| வ.எண் | வரியில்லா இன எண் | தொகை |
|---|---|---|
| 1 | 065/11003 | ரூ.2,52,000/– |
| 2 | 065/11004 | ரூ.2,56,400/– |
| 3 | 065/11009 | ரூ.59,000/– |

எனவே, மேற்காணும் 3 வரியில்லா இன எண்களை நீக்கவும் கேட்பினை தள்ளுபடி செய்யவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அ.கு: மன்றம் அனுமதி வழங்கலாம்.

தீர்மானம் – அனுமதி வழங்கப்பட்டது.

**479. ந.க.எண்.அ4/0795/2023**

சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத்திட்டம் –2021–2022 கீழ் குன்னூர் நகராட்சிக்கு மாவட்ட ஆட்சியாளர் அவர்களின் செயல்முறை எண்.Roc.B1.No.3073/2021 நாள்.28.02.2023ன் படி கீழ்கண்ட பணிக்கு ரூ.1,00,000/– மதிப்பீட்டில் மேற்கொள்ள நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளதை (அரசு மானியமாக ரூ.1.00 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது) மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டுத்தொகை ரூபாய் இலட்சத்தில் |
|---|---|---|
| | **சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத்திட்டம் – 2021 –2022** | |
| 1. | குன்னூர் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.24 உள்ள வார்டு ஹபார்ட்ஸ் சாலையிலுள்ள போப்ஸ் கம்பெனி எதிரிலுள்ள மது ஜெயந்தி கட்டிடம் அருகில் மழைநீர் வடிகால் வாய் அமைத்தல் | 1.00 |

அ.கு: மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

தீர்மானம் – பார்வையிட்டு பதிவு செய்யப்பட்டது.

**480. ந.க.எண்.அ4/0796/2023**

பாராளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதி (Lok Shabha) 2022 –23 கீழ் குன்னூர் நகராட்சிக்கு மாவட்ட ஆட்சியாளர் அவர்களின் செயல்முறை

எண்.Roc.A5.No.313/2023 நாள். **28.02.2023** படி கீழ்கண்ட பணிக்கு ரூ.**15,00,000/–** மதிப்பீட்டில் மேற்கொள்ள நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளதை (அரசு மானியமாக ரூ.**15.00** இலட்சம் வழங்கப்பட்டுள்ளது) மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டுத்தொகை ரூபாய் இலட்சத்தில் |
|---|---|---|
| | **பாராளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத்திட்டம் – 2022–2023** | |
| **1.** | குன்னூர் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.2ல் உள்ள மவுண்ட் பிளசண்ட் பகுதியில் நியாய விலைக்கடை அமைத்தல் | **15.00** |

அ.கு: மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

தீர்மானம் – பார்வையிட்டு பதிவு செய்யப்பட்டது.

**481.**ந.க.எண்.பி3/572/2023

இந்நகராட்சியில் TURIP **3** திட்டத்தில் **2017–2018** ஆம் ஆண்டு சாலை வேலை முடிக்கப்பட்டுள்ளது. மேற்கண்ட வேலைக்கு கூடுதலாக பிடித்தம் செய்யப்பட்ட வைப்புத்தொகை ரூ.**1,67,163/– 2018–2019**ம் ஆண்டு காலம் கடந்த வைப்புத்தொகைக்கு வரவு வைக்கப்பட்டுள்ளது. எனவே இத்தொகையினை திருவாளர். ஹில் டாப் கன்ஸ்டரக்சன்ஸ், ஒப்பந்ததாரருக்கு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு: அனுமதி வழங்கலாம்.

தீர்மானம் – அனுமதி வழங்கப்பட்டது.

**482. ந.க.எண்.அ6/2949/2016**

குன்னூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.**1** முதல் **30** வரை உள்ள வார்டுகளில், தொழில் வரி விதிப்பு செய்யப்பட்டதில் சில கடைகள் வருவாய் துறை மூலமாக இடித்து அகற்றப்பட்டது மற்றும், நெடுஞ்சாலை துறைக்கு சம்மந்தமான இடத்தில் உள்ள கடைகளை சாலை விரிவுபடுத்தும் போது இடித்ததும் அகற்றப்பட்டன. சில கடைகள் இரட்டை பதிவாகவும், பல கடைகள் முடிப்பட்ட நிலையிலும் சம்மந்தப்பட்ட நபர்கள் கடைகளை காலி செய்து விட்டு வெளியூர் சென்று விட்டதாலும் **282** வரிவிதிப்பு தாரர்களிடமிருந்து விதி தொழில் வரியை வசூலிக்க இயலவில்லை. எனவும் அதற்கான கேட்பினை தள்ளுபடி செய்ய நடவடிக்கை எடுக்குமாறும் இவ்வலுலக வருவாய் உதவியாளர்கள் மற்றும் வருவாய் ஆய்வாளரால்அறிக்கை செய்யப்பட்டுள்ளது. எனவே சம்மந்தப்பட்ட **282** வரிவிதிப்பு தாரர்களுக்கு கேட்பு அறிவிப்புகள் தபால் மூலம் அனுப்பியும் மேற்கண்ட காரணங்களால் இவ்வலுவலகத்திற்கு தபால்கள் அனைத்தும் திரும்பி வரப்பட்டுள்ளது. மேலும் இவ்வலுவலக துப்புரவு பணி மேற்பார்வையாளர்கள் மற்றும் துப்புரவு ஆய்வாளருக்கு குறிப்பாணை வழங்கி மேற்கண்ட தொழில் வரி விதிப்புகளுக்குரிய கடைகள் செயல்படுகிறதா என ஆய்வு செய்தும், மேற்காணும் வரி விதிப்புகளுக்கு D & O Licence ஏதும் வழங்கப்பட்டுள்ளதா என்பது குறித்தும் இடங்களை நேரில் ஆய்வு செய்து அறிக்கை சமர்பிக்குமாறு கேட்டுக்கொண்டதில் அனைத்து துப்புரவு பணி மேற்பார்வையாளர்களும் மற்றும்

துப்புரவு ஆய்வாளரும் மேற்கண்ட கடைகள் அனைத்தும் செயல்படவில்லை எனவும், D & O Licence மேற்படி கடைகளுக்கு ஏதும் இல்லை எனவும் அறிக்கை செய்துள்ளார்கள். எனவே இவ்வலுவலக அலுவலர்களின் அறிக்கையின் படி வார்டு எண் 1 முதல் 30 வரை உள்ள282 வரிவிதிப்புகளுக்குரிய தொழில் வரி நிலுவை தொகை ரூ.18,80,566/—யை தள்ளுபடி செய்யவும் சம்பந்தப்பட்ட வரி விதிப்புகளை கணினியில் இருந்து நீக்கம் செய்யவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:** மன்றம் அனுமதிக்கலாம்.

தீர்மானம் – அனுமதிக்கப்பட்டது.

**483. ந.க.எண்.சி4/1521/2022**

இந்நகராட்சியின் 2022—23 ஆம் ஆண்டிற்கு கணினி மையத்திற்கு வரிவசூல் ரசீது தேவைப்படுவதால் அரசு அங்கீகாரம் பெற்ற தொழில் கூட்டுறவு அச்சகங்களிலிருந்து விலைப்புள்ளிகள் பெற்று ரசீதுகளை வாங்கவும் அதற்காகும் செலவினம் ரூ.70,000/—க்கும் ரூபாய் எழுபதாயிரம் மட்டும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:** மன்றம் அனுமதி வழங்கலாம்.

தீர்மானம் – அனுமதி வழங்கப்பட்டது.

**484. ந.க.எண்.சி4/2760/2021.**

இந்நகராட்சி பொதுப்பிரிவில் உள்ள ஆணையாளர் அறையில் நகராட்சி நிர்வாக இயக்குநர், மாவட்ட ஆட்சியர் மண்டல இயக்குநர் ஆகியோர்களின் ஆய்வு கூட்டம் அடிக்கடி நடைபெறுகிறது. ஆய்வு கூட்டம் நடைபெறும்போது அவ்வப்போது ஏற்படும் மின்துண்டிப்பு காரணமாக சரிவர பங்கேற்க இயலாத நிலை ஏற்படுகிறது எனவே, தொடர்ந்து ஆய்வுக்கூட்டங்களில் கலந்து கொள்ளவும் மின் துண்டிப்பை ஈடு செய்யவும் புதிய UPS வாங்கி பொருத்துவது அவசியமாகிறது.

ஆகவே, குன்னூர் நகராட்சி ஆணையாளர் அறை உள்ளிட்ட பொதுப்பிரிவிற்கு 5KVA UPS வாங்குவதற்கும், இதற்கான தோராய செலவினம் ரூ.75,000/—க்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு:— மன்றம் அனுமதி வழங்கலாம்.

தீர்மானம் – அனுமதி வழங்கப்பட்டது.

**485. ந.க.எண்.சி6/1521/2023.**

இந்நகராட்சியின் அலுவலக பணிக்கு 2023 ஆம் ஆண்டிற்கு கணினி மையத்திற்கு வரிவசூல் ரசீதுகளை பெற அரசு அங்கீகாரம் பெற்ற கூட்டுறவு அச்சகத்தில் இருந்து ரசீதுகளை வாங்குவதற்கு 23.03.2023ஆம் தேதியன்று விலைப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்க்கண்ட 3 நிறுவனத்திடமிருந்து விலைப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளது. மேற்படி விலைப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | பொருட்களின் விவரம் | நிறுவனங்களின் பெயர்கள் | | |
|---|---|---|---|---|
| | | எவர்சைன் மல்டி பர்பஸ் தொழிற்கூட்டுறவு சங்கம் லிமிடெட் | தரமணி பெண்கள் எழுதுபொருட்கள்& அச்சுக்கூடதொழிற் கூட்டுறவு சங்கம் லிமிடெட் | ABC பார்மஸ் |
| 1 | கணிணி மைய வரிவசூல் ரசீது ( 100 ரசீதுகள்) | 550/– | 732/– | 600/– |

மேற்கண்ட 3 நிறுவனங்களில் குறைவான விலைப்புள்ளி அளித்த எவர்சைன் மல்டிபர்பஸ் தொழிற் கூட்டுறவு சங்கம் லிமிடெட் ராயப்பேட்டை நிறுவனத்தின் விலைப்புள்ளி குறைவாக உள்ளதால் அதனை ஏற்று கணிணி மையத்திற்கு வரிவசூல் ரசீதுகளை பெற விநியோக உத்திரவு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அ.கு: மன்றம் அனுமதி வழங்கலாம்.

தீர்மானம் – அனுமதி வழங்கப்பட்டது.

**486. ந.க.எண்.இ3/5647/2005.**

இந்நகராட்சியில் 2023–24ம் ஆண்டிற்கு புதிய குடிநீர் இணைப்பு வழங்கு வதற்குறிய மதிப்பீடு தயார் செய்வதற்கு 2022–2023ம் ஆண்டின் சாலை சீரமைப்பு கட்டணத்தை 5% சதவீதம் உயர்த்தி கீழ்கண்ட விவரப்படி மதிப்பீடு தயார் செய்வதற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வரிசை எண் | சாலையின் தன்மை | நீளம் | 2022–2023ம் ஆண்டு | 2023–2024ம் ஆண்டு |
|---|---|---|---|---|
| 1 | சிமெண்ட் சாலை | (0–30m)<br>(31–90m) | 5520<br>6600 | 5800<br>6930 |
| 2 | மண் சாலை | (0–30m)<br>(31–90m) | 2760<br>3830 | 2900<br>4022 |
| 3 | தார் சாலை | (0–30m)<br>(31–90m) | 4920<br>5970 | 5170<br>6270 |

அலுவலக குறிப்பு – அனுமதி வழங்கலாம்.

தீர்மானம் – அனுமதி வழங்கப்பட்டது.

**487. ந.க.எண்.இ2/1043/2023**

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட டி.டி.கே சாலையில் உள்ள C.S.I மயானத்திற்க புதியதாக மின் கம்பம் மற்றும் மின் பாதை அமைத்த மின் இணைப்பு பெற தமிழ்நாடு மின்சார வாரியத்திடம் மதிப்பீடு கோரப்பட்டதில் தற்போது மின் வாரியத்திடம் இருந்து மதிப்பீடு ரூ.1,00,650/–ற்கு வரப்பெற்றுள்ளது. எனவே தமிழ்நாடு மின்வாரியத்திற்கு தொகை செலுத்த மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அ.கு: மன்றம் அனுமதி வழங்கலாம்.

தீர்மானம் – அனுமதி வழங்கப்பட்டது.

**488. ந.க.எண். இ2/1047/2023**

இந்நகராட்சிக்குட்பட்ட இந்து மற்றும் கிருஷ்டியன் மயானத்திற்கு கூடுதலாக 6–மின் கம்பங்கள் அமைத்து மின் விளக்குகள் பொருத்த தமிழ்நாடு மின் வாரியத்திடம் மதிப்பீடு கோரப்பட்டதில் மதிப்பீடு ரூ.83,650/–ற்கு வரப்பெற்றுள்ளது. எனவே தமிழ்நாடு மின் வாரியத்திற்கு மேற்குறிப்பிட்ட தொகை செலுத்த மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அ.கு: மன்றம் அனுமதி வழங்கலாம்.

தீர்மானம் – அனுமதி வழங்கப்பட்டது.

**489. ந.க.எண்.அ1/0938/2023**

குன்னூர் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.7ல் குன்னூர் கிளப்ரோடு பகுதியில் புனித அந்தோணியார் மேல்நிலைப்பள்ளியில் சொத்து வரி விதிப்பு எண்.065/007/900537 கட்டிடமானது பங்குத்தந்தையார்கள் (பாதிரியார்கள்) தங்கும் குடியிருப்பு கட்டிடம் என்றும் அதற்குண்டான வரி விதிப்பானது வணிகப்பயன்பாட்டில் இருந்து குடியிருப்பு பயன்பாட்டிற்கு மாற்றிதர கோரிய விண்ணபத்தினை இவ்வலுவலக வருவாய் உதவியாளர் மற்றும் வருவா. அலுவலர் ஆகியோர் மேற்படி கட்டிடத்தினை நேரில் ஆய்வு செய்யப்பட்டதில் மேற்கண்ட வரிவிதிப்பு கட்டிடமானது ஓட்டுக்கூரையுடன் குடியிருப்பு பயன்பாட்டில் தான் பயன்படுத்தி வருகிறார்கள் என அறிக்கை செய்துள்ளார்கள். எனவே, அவர்களின் குறிப்பின் படி மனுதாரரின் சொத்து வரி விதிப்பு எண்.065/007/900537ஐ நீக்கம் செய்து புதிய குடியிருப்பு பயன்பாட்டில் வரிவிதிப்பு செய்ய மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு: மன்றம் அனுமதி வழங்கலாம்.

தீர்மானம் – அனுமதி வழங்கப்பட்டது.

**490. ந.க.எண். இ3/6278/2013**

அரசாணை எண்.174 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (குடிநீர் வழங்கல் 4) துறை, நாள்.24.11.2015 ன்படி எமரால்டு கூட்டுக்குடிநீர் திட்டத்தின் கீழ் குன்னூர் நகராட்சி பகுதிக்கான மதிப்பீடு ரூ.40.19 கோடி மதிப்பீட்டில் தமிழ் நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம் பணிகள் மேற்கொள்ள நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அதன்படி கூட்டுக்குடிநீர் பணிகள் நடைபெற்று வந்த நிலையில் செயற்பொறியாளர், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், உதகை அவர்களின் கடித எண்.CWSS to Coonoor Mpty-WMS-PII/DB/SDO/2018, நாள்.12.06.2018, மாவட்ட ஆட்சியர், நீலகிரி மாவட்டம் உதகை அவர்களின் ஆய்வு கூட்ட நாள்.08.02.2019 மற்றும் செயல் அலுவலர், ஜெகதளா பேரூராட்சி அவர்களின் கடித எண்.48/2018, நாள்.21.02.2019 ன்படி கூட்டு குடிநீர் திட்டத்தின் கீழ் குன்னூர் நகராட்சிக்கு விநியோகிக்கப்படும் குடிநீரிலிருந்து 0.30 எம்.எல்.டி (3.00 இலட்சம்) லிட்டர் குடிநீர் ஜெகதளா பேரூராட்சிக்கு வழங்க கோரப்பட்டது. நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடிதம் எண்.8228/2018/WS1, நாள்.14.10.2019ல் ஜெகதளா பேரூராட்சிக்கு அனுமதி வழங்கப்பட்டதை தொடர்ந்து தனி அலுவலர், குன்னூர் நகராட்சி, குன்னூர் அவர்களின் தீர்மான எண்.715, நாள்.15.10.2019ன்படி எமரால்டு கூட்டுக்குடிநீர் திட்டத்தில் ஜெகதளா டவுன்

பஞ்சாயத்திற்கு 0.30 எம்.எல்.டி (3.00 இலட்சம்) லிட்டர் குடிநீர் வழங்கப்படும் எனவும் அதற்கான பிரதான குாாய்கள் மற்றும் குடிநீர் அளவு மானி தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், உதகை அவர்களின் மூலம் ஜெகதளா பேரூராட்சியே பொருத்திக்கொள்ளவும், இத்திட்டத்திற்காக குன்னூர் நகராட்சி TUIFSL நிறுவனத்திடமிருந்து 14.30 கோடி கடன் பெறப்பட்டுள்ள நிலையில் ஜெகதளா பேரூராட்சிக்கு 0.30 எம்.எல்.டி (3.00 இலட்சம்) லிட்டர் குடிநீர் வழங்க விகிதாசார செலவு (Proportionate cost) ரூ.2.20 கோடி குன்னூர் நகராட்சி செலுத்துமாறும் –விகிதாசார செலவு (Proportionate cost) ரூ.2.20 கோடி செலுத்தும் தருவாயில் புரிந்துணர்வு ஒப்பந்தம் (Memorandum of Understanding)செய்து கொடுக்கப்படும் எனவும் தமிழ் நாடு வடிகால் வாரியத்தின் மூலம் ஜெகதளா பேரூராட்சிக்கு தனியாக குடிநீர் திட்டம் ஏற்படுத்தும்பொழுது தற்பொழுது வழங்கப்படும் 0.30 எம்.எல்.டி (3.00 இலட்சம்) லிட்டர் குடிநீரை மீண்டும் குன்னூர் நகராட்சிக்கே வழங்கக்கோரியும் இவ்வலுவலக கடித எண்.6278/2013/இ3, நாள்.15.12.2020ன்மூலம் தெரிவிக்கப்பட்டது. மேலும் தற்பொழுது மேற்படி திட்டப்பணி முழுவதும் முடிவடைந்து நவம்பர் 2021 முதல் குன்னூர் நகராட்சிக்கு 5.11 எம்.எல்டி குடிநீர் தினமும் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

தற்பொழுது மேற்படி திட்டத்திலிருந்து 0.30 எம்.எல்.டி (3.00 இலட்சம்) லிட்டர்குடிநீர் பெற பேரூராட்சிகள் இயக்குநர், சென்னை அவர்கள் ஜெகதளா பேரூராட்சிக்கு ரூ.3.00 கோடி நிதி ஒதுக்கப்பட்டு தொகை விடுவிக்கப்பட்டுள்ளதால் ரூ.2.20 கோடி விகிதாசார செலவு (Proportionate cost) குன்னூர் நகராட்சிக்கு செலுத்த பேரூராட்சிகள் இயக்குநர், சென்னை அவர்களின் அனுமதி பெறுவதற்கு கீழ்கண்ட ஒப்பந்தங்களின்படி குன்னூர் நகராட்சி ஆணையாளர் மற்றும் ஜெகதளா பேரூராட்சி செயல் அலுவலர் ஆகியோர் ஒப்பந்தம் செய்ய தீர்மானம் நிறைவேற்றித்தர செயல் அலுவலர் ஜெகதளா பேரூராட்சி அவர்களின் 20.03.2023ம் தேதிய கடிதத்தில் கோரப்பட்டுள்ளது.

1. நகராட்சி ஆணையாளர் தினமும் மூன்று இலட்சம் லிட்டர் தண்ணீரினை ஜெகதளா பேரூராட்சிக்கு விநியோகம் செய்ய வேண்டும்.
2. தமிழ் நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் குழாய் விஸ்தரிப்பு மற்றும் தண்ணீர் அளவு மானி பொருத்தப்பட வேண்டும்.
3. ஜெகதளா பேரூராட்சிக்கு எமரால்டு கூட்டுக்குடிநீர் திட்டம் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் தனியாக குடிநீர் திட்டம் ஏற்படுத்தப்படும்பொழுது குன்னூர் நகராட்சி மூலம் இந்த திட்டத்தின்படியான குடிநீர் நிறுத்தப்படும்.
4. மாதாந்திர கட்டணம் தண்ணீர் அளவு மானியின் அடிப்படையில் குன்னூர் நகராட்சிக்கு ஜெகதளா பேரூராட்சியின் மூலம் செலுத்தப்படும்.

எமரால்டு கூட்டு குடிநீர் திட்டப்பணி முழுவதும் முடிவடைந்து நவம்பர் 2021 முதல் குன்னூர் நகராட்சிக்கு 5.11 எம்.எல்டி குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வரும் நிலையில் மேற்படி ஒப்பந்தங்களில் தமிழ் நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் குழாய் விஸ்தரிப்பு மற்றும் தண்ணீர் அளவு மானி ஜெகதளா பேரூராட்சியே பொருத்திக்கொள்ள தெரிவித்தும் அவ்வாறு தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம் விஸ்தரிப்பு மற்றும் தண்ணீர் அளவு மானி பணி

மேற்கொள்ளும் நிலையில் நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் உத்திரவில் தெரிவிக்கப்பட்ட மேற்கண்ட நான்கு நிபந்தனைகளுக்கு உட்பட்டு **0.30** எம்.எல்.டி **(3.00** இலட்சம்**)** லிட்டர் குடிநீர் வழங்க குன்னூர் நகராட்சி ஆணையாளர் மற்றும் ஜெகதளா பேரூராட்சி செயல் அலுவலர் ஆகியோர் புரிந்துணர்வு ஒப்பந்தம் (Memorandum of Understanding) செய்ய நடவடிக்கை மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு – மன்றம் அனுமதி வழங்கலாம்.

தீர்மானம் – அனுமதி வழங்கப்பட்டது.

**491.ந.க.எண்.இ4/2023.**

குன்னூர் நகராட்சிக்கு உட்பட்ட வார்டு எண் **8**–ல் உள்ள வண்டிச்சோலை நகராட்சி பள்ளிக்கு அருகில் உள்ள கட்டிடம் பயன் படுத்தாமல் உள்ளது. தற்போழுது தமிழக முதலமைச்சர் அவர்களால் **1** முதல் **5**ஆம் வகுப்பு வரை அரசுப்பள்ளிகளில் பயிலும் மாணவர்களுக்கு காலைச்சிற்றுண்டி வழங்கும் திட்டத்திற்க்கு இக்கட்டித்தினை ஒருகினைந்த சமையல் கூடமாக பயண்படுத்த உத்சேதிக்கப்பட்டுள்ளது. அதனால் இக்கட்டிடத்திற்க்கு சமையல் கூடம், வைப்பு அறை பாத்திரங்கள் கழுவுவதற்க்கு மற்றும் சில மராமரத்து பணிகள் மேற்க்கொள்ள வேண்டியுள்ளது. இப்பணிகளை மேற்கொள்ள தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.**5.00** இலட்சத்திற்க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு – அனுமதி வழங்கலாம்.

தீர்மானம் – அனுமதி வழங்கப்பட்டது.

**492. ந.க.எண்.சி2/2022**

**நகர மன்ற தலைவர் அவர்களால் கொண்டுவரப்படும் தீர்மானம்.**

**6**–வது வார்டுக்கு உட்பட்ட மவுண்ட் ரோடு பகுதியில் நிழற்குடை இல்லாத காரணத்தினால் லாலி மருத்துவமனையில் இருந்து வரும் நோயாளிகள் மற்றும் பேருந்திற்காக காத்திருக்கும் பொது மக்கள் மிகவும் சீரமத்திற்கு உள்ளாகிறார்கள் எனவே மவுண்ட் ரோடு பகுதியில் நிழற்குடை அமைத்து தரகோரியுள்ளார்.

தீர்மானம் – தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

**493. ந.க.எண்.சி2/2022**

**4–வது வார்டு நகர மன்ற உறுப்பினர் திருமதி. சாந்தா சந்திரன் அவர்களால் கொண்டுவரப்படும் தீர்மானம்.**

ஹவுசிங் யூனிட் பகுதில் உள்ள தண்ணீர் பகிர்மான குழாய் மிகவும் பழுதடைந்து குடிநீர் வீனாகிறது மேலும் இதனுடம் கழிவு நீர் கலக்கிறது இதனால் பொது மக்கள் மிகவும் சிரமப்படுகிறார்கள்.

ஜாய்ஸ் பில்டிங் பகுதியில் ராமகிருஷ்ணன் வீட்டின் அருகில் உள்ள கழிவுநீர் கால்வாய் பழுதடைந்துள்ளது இதனால் மழைக் காலங்களில் கழிவுநீர் அருகாமையில் உள்ள வீடுகளுக்குள் புகுந்து விடுகிறது இதனை சரி செய்து தரகொரியுள்ளார்.

டோபிகானா பகுதியில் உள்ள பொது கழிப்பிடம் மிகவும் பழுதடைந்து பொது மக்கள் பயன்படுத்த முடியாதநிலையில் உள்ளது அதனை சரிசெய்து தரகொரியுள்ளார்.

தீர்மானம் – தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

**494. ந.க.எண்.சி2/2022**

**5–வது வார்டு நகர மன்ற உறுப்பினர் திரு. எஸ். ஜெகநாதன் அவர்களால் கொண்டுவரப்படும் தீர்மானம்.**

5–வது வார்டில் அமைந்துள்ள துப்புறவு வளாகம் அருகில் உள்ள செப்டிக் டேங்க் பழுது அடைந்து அருகாமையில் உள்ள சமுதாய கூடத்திற்குள் கழிவு நீர் புகுந்து சமுதாய கூடம் அசுத்தம் அடைந்துள்ளது எனவே இதனை சரிசெய்து தரகோரியுள்ளார்.

சத்திய மூர்த்தி நகரில் உள்ள சமுதாய கூடத்தில் இயங்கி வரும் நியாய விலை கடையை வண்ணாரப்பேட்டை முருகன் கோவிலுக்கு அருகாமையில் நகராட்சிக்கு சொந்தமான இடத்தில் புதிய ரேசன் கடையை அமைத்து தர கோரியுள்ளார்.

தீர்மானம் – தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

**495. ந.க.எண்.சி2/2022**

**8–வது வார்டு நகர மன்ற உறுப்பினர் திருமதி. எஸ். செல்வி அவர்களால் கொண்டுவரப்படும் தீர்மானம்.**

- வண்டிசோலை பகுதியில் சமுதாயக்கூடம் அமைத்து தரகோரியுள்ளார்
- வண்டிசோலை பகுதி(உப்புத்தொட்டி) கிணறு மற்றும் தண்ணீர் தொட்டி அமைத்து தரகோரியுள்ளார்
- எலிசபெத் ரீட்டா க.எண் 18/26 முதல் அமிர்தம் வீடு க.எண் 16/20 வரை, சுசிலா வீடு க.எண்12 முதல் மணி ராணி க.எண் 11 வரை, ராஜா க.எண் 60/எ3 முதல் தர்மன் வீடு க.எண் 12 வரை நடைப்பாதை அமைத்து தரகோரியுள்ளார்.
- சிவலிங்கம் வீடு க.எண் 47 முதல் ராஜசேகர் க.எண் 44 வரை கழிவு நீர் கால்வாய் அமைத்து தரகோரியுள்ளார்.
- செல்வி வீடு க.எண் 47/4 முதல் சத்தீஸ் பாபு வீடு க.எண் 46 வரை, மனோகர் வீடு க.எண் 33டி முதல் லட்சுமணன் வீடு க.எண் 60 வரை தடுப்புசுவர் மற்றும் சீரமைத்து தரகோரியுள்ளார்.

தீர்மானம் – தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

**496. ந.க.எண்.சி2/2022**

**13–வது வார்டு நகர மன்ற உறுப்பினர் திரு. கே. நாகராசன் அவர்களால் கொண்டுவரப்படும் தீர்மானம்.**

- ஆப்பிள் பீ வண்ணாரப்பேட்டை குறுக்கு சாலையில் எஸ்.எஸ் டிரான்ஸ் பார்மர் முதல் விநாயகர் கோயில் வரை உள்ள நடைப்பாதை மற்றும் கழிவு நீர் கால்வாய் சரிசெய்து தரகோரியுள்ளார்.

- விநாயகர் கோயில் தெருவில் உள்ள பார்த்த சாரதி வீடு முதல் தேவராஜ் வீடு வரை உள்ள நடைப்பாதையை சிமெண்ட் நடைப்பாதையாக மாற்றித் தரகோரியுள்ளார்.

தீர்மானம் – தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

**497. ந.க.எண்.சி2/2022**

**10–வது வார்டு நகர மன்ற உறுப்பினர் திருமதி. ஐ. பாக்கியவதி அவர்களால் கொண்டுவரப்படும் தீர்மானம்.**

அம்பேத்கர் நகர் பகுதியில் சமுதாயக்கூடம், அப்பகுதியில் உள்ள கழிவு நீர் கால்வாய், பழுதடைந்த மின் கம்பங்களை சீரமைத்து தரகோரியுள்ளார்.

தீர்மானம் – தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

**498. ந.க.எண்.சி2/2022**

**15–வது வார்டு நகர மன்ற உறுப்பினர் திருமதி. வே. செல்வி அவர்களால் கொண்டுவரப்படும் தீர்மானம்.**

- முத்தாலாம்மன் கோயில் பகுதியில் படிக்கட்டுக்கள் மிகவும் பழுதடைந்து உள்ளது அதனை சரிசெய்து தரகோரியுள்ளார்.
- வினோத் வாசுகி வீடு முதல் லட்சுமணன் ஜனகி வீடு வரை கழிவு நீர் கால்வாய்யுடன் கூடிய நடைப்பாதை அமைத்து தரகோரியுள்ளார்.
- சந்திரா காலணி பகுதியில் உள்ள கழிவு நீர் கால்வாய் பழுதடைந்து கழிவு நீர் அருகாமையில் உள்ள வீட்டிற்குள் செல்கிறது எனவே இக்கழிவு நீர் கால்வாய்யை சரிசெய்து தரகோரியுள்ளார்.

தீர்மானம் – தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

**499. ந.க.எண்.சி2/2022**

**20–வது வார்டு நகர மன்ற உறுப்பினர் திருமதி. எஸ். வசந்தி அவர்களால் கொண்டுவரப்படும் தீர்மானம்.**

- சிந்தியா வீட்டின் முன்பு உள்ள தடுப்பு சுவர் இடிந்து மோசமான நிலையில் உள்ளது அதனை சரிசெய்து தாகோரியுள்ளார்.
- இப்பகுதியில் உள்ள கழிப்பிடம் மிகவும் பழுதடைந்து பொது மக்கள் பயன் படுத்த முடியாத நிலையில் உள்ளது அதனை சரிசெய்து தாகோரியுள்ளார்.
- ரெயிலி காம்பவுண்ட்டு கேரளா சமாஜம் அருகில் உள்ள கழிவு நீர் கால்வாய் பழுதடைந்து கழிவு நீர் நடைப்பாதையில் செல்கிறது அதனை சரிசெய்து தாகோரியுள்ளார்.
- மாடல் ஹவுஸ் சமுதாய கூடம் மிகவும் பழுதடைந்து பயன் படுத்த முடியாத நிலையில் உள்ளது அதனை சரிசெய்து தாகோரியுள்ளார்.

தீர்மானம் – தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

**500. ந.க.எண்.சி2/2022**

**24–வது வார்டு நகர மன்ற உறுப்பினர் திருமதி. த. சித்ரா அவர்களால் கொண்டுவரப்படும் தீர்மானம்.**

- புரூக்லேண்ட்ஸ் காலனி பகுதி ஒத்தை லைன் பகுதியில் நாகம்மா வீடு முதல் ஈஸ்வரி வீடு வரை கழிவுநீர் கால்வாய் மற்றும் நடைப்பாதை அமைத்து தரகோரியுள்ளார்.
- SV கேஸ் குடோன் முன்புறம் உள்ள நடைப்பாதை சரிசெய்து தரகோரியுள்ளார்.

தீர்மானம் – தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

**501. ந.க.எண்.சி2/2022**

**27–வது வார்டு நகர மன்ற உறுப்பினர் திரு. எம். குமரேசன் அவர்களால் கொண்டுவரப்படும் தீர்மானம்.**

கீழ் கண்ட இடங்களில் கழிவு நீர் கால்வாய் மற்றும் நடைப்பாதை அமைத்து தரகோரியுள்ளார்

1. போயர் காலணி இப்ராஹிம் வீடு முதல் தாமஸ் வீடு வரை, விநாயகர் கோயில் முதல் அந்தோணி வீடு வரை.
2. மேட்டுப்பாளையம் ரோடு முதல் அன்வர் பாஷா வீடு வரை நடைப்பாதை, மேட்டுப்பாளையம் ரோடு முதல் கோகுல் வீடு வரை நடைப்பாதை மற்றும் தடுப்புசுவர்.
3. பால்காரர் லைன் புஷ்பராஜ் வீடு முதல் சுப்பிரமணி வீடு வரை கழிவு நீர் கால்வாய்யுடன் கூடிய நடைப்பாதை, சுந்தர் வீடு அருகாமையில் தடுப்பு சுவர் அமைத்து தரகோரியுள்ளார்.
4. டபுல் ரோடு பகுதியில் எண்.6, கிளண்டேல் எஸ்டேட் பணியாளர் குடியிருப்பு பகுதியில் புதியதாக 10 தெரு விளக்கு அமைத்து தரகோரியுள்ளார்.

தீர்மானம் – தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

**502. ந.க.எண்.சி2/2022**

**29–வது வார்டு நகர மன்ற உறுப்பினர் திருமதி. வி. உமா அவர்களால் கொண்டுவரப்படும் தீர்மானம்.**

கீழ் கண்ட இடங்களில் தடுப்பு சுவர், நடைப்பாதை மற்றும் படிக்கட்டுகள் அமைத்து தரகோரியுள்ளார்.

1. இந்திரா நகர் பகுதியில் முனீஸ்வரர் கோயில் முதல் முத்து மாரியம்மன் கோயில் வரை தடுப்பு சுவர் மற்றும் நடைப்பாதை.
2. குமார் வீடு முதல் நடராஜ் வீடு வரை
3. செல்வநாயகன் வீடு முதல் கணேஷ் வீடு வரை
4. தியாகு வீடு முதல் கிருஷ்ணகுமார் வீடு வரை
5. லோகேஷ்வரி வீடு முதல் கார்த்திக் வீடு வரை
6. செல்வா வீடு முதல் கார்மேகம் வீடு வரை
7. சண்முகம் வீடு முதல் ஸ்டீபன் வீடு வரை தடுப்பு சுவர் மற்றும் நடைப்பாதை.
8. காந்திபுரம் பள்ளியில் கழிவரை வசதி செய்து தரகோரியுள்ளார்.
9. காந்திபுரம் பள்ளிக்கு செல்லும் நடைப்பாதையை சீரமைத்து தரகோரியுள்ளார்.

10. காந்திபுரம் திருமண மண்டபம் முதல் சரவணன் வீடு வரை படிக்கட்டுகள் அமைத்து தரகோரியுள்ளார்.

தீர்மானம் – தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

**503. ந.க.எண்.சி2/2022**

**30–வது வார்டு நகர மன்ற உறுப்பினர் திருமதி. எஸ். காவேரி அவர்களால் கொண்டுவரப்படும் தீர்மானம்.**

கீழ் கண்ட இடங்களில் தடுப்பு சுவர், அமைத்து தரகோரியுள்ளார்.

1. சீனிவாசன் வீடு முதல் வீராயன் வீடு வரை.
2. கமலா வீடு முதல் சரோஜா வீடு வரை.
3. ரேனு வீடு முதல் கமலா வீடு வரை.
4. சித்தி விநாயகர் கோவில் தெரு ஆரம்பம் முதல் வீதியின் இறுதி வரை நடைபாதையுடன் கூடிய கழிவு நீர் கால்வாய் அமைத்து தரகோரியுள்ளார்.

தீர்மானம் – தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

ஒம்/– திருமதி. எல். ஷீலா கேத்திரின்,
நகர மன்றம் தலைவர்.

/உண்மை நகல்/

31/3/23
ஆணையாளர்,
குன்னூர் நகராட்சி.
31/3/23